Phone No 4502

விலை அரை அணு

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (26—5—50) ❀ வெளியூர் (27—5—50) [இதழ் 262

"வர்ணாஸ்ரமக் கொடுமைகள் பௌத்த மதத்தில் இல்லை"

உயர்ந்தோர் தாழ்ந்தோர் பாகுபாடுகள் திரண்டதே இந்துமதம்

பௌத்த மதத்தில் பற்று அதிகம் காட்டுவதற்கு அம்பேத்கார் விளக்கம்

—(0)—

"தாழ்த்தப்பட்டோர் மதிக்கப்படுவதே என் வாழ்க்கை இலட்சியம்"

"ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கும் தீய பழக்க வழக்கங்களும், ஒருவரை உயர்ந்தோராகவும், மற்றொருவரைத் தாழ்ந்தோராகவும் செய்யும் பாரபட்சமுள்ள விதிகளும் இந்துமதத்தில் இல்லை; ஒரு சிலர் தான் அறிவுத் திறன் அடைய முடியும். என்ற தப்பெண்ணங்களும், வர்ணாஸ்ர முறைப்படி கைக்கொள்ளப்படும் பாகுபாடுகளும் இந்து மதத்தில் மட்டும்தான உள்ளன." என்று சட்ட மந்திரி டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் ஒரு பேட்டியில் கூறினார்.

அச்சாரங்களும் விசாரங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருக்கக் கூடாதென்றும் அப்படி இருக்கிறதென்று கூறப்படுமானால் தத்துவங்களமே பொய்யென்றுதான் கருதப்பட வேண்டுமென்றும் அறிவித்தார்.

பண்டைகாலத்தில் பார்ப்பனர்கள் எல்லோரும் சமமென்ற கொள்கையைக் கைக்கொண்டிருந்தனரென்றும் ஆனால் இன்று எல்லா ஜீவப்பிறவிகளுக்குள் உள்ள உயிர் ஒரேவகையானதென்றும் உயர்வு தாழ்வு அற்றதென்றும் கருதப்படாததென்றும் தோழர் அம்பேத்கார் அறிவித்தார்.

"தெற்கிலுள்ள மக்கள் உயர்வுதாழ்வு அதிகம் பாராட்டுவதில்லையென்று கூறுவது மட்டும் போதாது; அன்றாட வாழ்க்கையில் வேறுபாடுகள் காட்டப்படாததோடு சட்டபூர்வமான ஆதரவு அளிக்கப்படவேண்டியது அவசியமாகும்."

"நான் எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்பது பற்றிய கவலை எனக்கில்லை. மற்றவர்கள் எனக்கு மதிப்பு தருகிறார்களா இல்லையா என்பது பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை. தாழ்த்தப்பட்டோர் மதிக்கப்படவேண்டும்; சமூகத்தில் அவர்களுக்கு மற்றவர்களைப் போலவே தகுந்த இடம் தரப்படவேண்டும் என்பதே என் அவா"

பௌத்த மதத்தைப் பற்றி தோழர் அம்பேத்கார் கூறியவையாவது:

"இந்தியாவில் 'அகிம்சை'யைப் பற்றி இரண்டுவிதமான ஒழுக்கங்கள், அதாவது ஜைனர் கைக்கொண்ட முறை மற்றையோர் கைக்கொள்ளும் முறையென இரு முறைகள் உள்ளன. புத்தர் கைக்கொண்ட அகிம்சை முறை இவ்விரண்டுக்கும் இடையானதாகும். புத்தர்பிரான அனாவசியமாக உயிர்க் கொலை செய்வதை விரும்பவில்லை"

"உணவு முறையில் 'அகிம்சை'த் தத்துவம் உபயோகிப்பது அவ்வளவு எளிதல்ல; ஆகையால் மாமிச உணவு உட்கொள்வதைத் தடுக்கவேண்டுமென்ற அவசியமில்லை.

சேப்பாக்கம் இல்லத்தில் பேட்டி

நேற்று காலையில் தோழர் அம்பேத்கார் தங்கியுள்ள சேப்பாக்கம் இல்லத்தில் மைசூர் சமஸ்தானத் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் குழு அவரை பேட்டிகண்டது அடுத்த அக்டோபரில் கோலார் பொன் வயலுக்குத்தான் வர இயலுமென்று தோழர் அம்பேத்கார் அறிவித்ததாகத் தெரிகிறது.

தோழர்கள ஆதிமூலம், ஆர். டி. எஸ். மூர்த்தி ஆகியவர்கள் தலைமையில் வட ஆற்காடு ஜில்லாவிலிருந்து ஒரு தூதுக் குழுவும், ஆந்திராவிலிருந்து ஒரு குழுவினரும் அவரைப் பேட்டிகண்டார்கள்.

இந்திய சர்க்கார் உபகாரச் சம்பளத் தொகையைக் குறைத்துவிட்டதால் பெருந் தொல்லைகளுக்காளாகியிருப்பதாக நெல்லூரிலிருந்து ஒரு மாணவர் குழு தோழர் அம்பேத்காரைப் பேட்டிகண்டு எடுத்துக்கூறிற்று.

கொழும்புக்குப் போவதற்கு முன பென்ஷன் அப்பீல் கோர்ட்டைத் தோழர் அம்பேத்கார் பார்வையிட்டார்.

இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது இந்துமத சம்பிரதாயத் திருமணங்களைப் பற்றி திருவனந்தபுரத்தில் கலந்து ஆலோசிப்பார்.

மலேயாவில் இரு பிரிட்டிஷ் மந்திரிகள் விஜயம்

கோலாலம்பூர் மே 25—

பிரிட்டிஷ் காலனி மந்திரி ஜேம்ஸ்கிரிபித்ஸும் யுத்த மந்திரி ஜான் ஸ்டிராட்சியும் இங்குவந்து சேர்ந்திருக்கின்றனர்.

இந்திய முதலாளிகள் சுரண்டுகிறார்களாம்

ஏடனில் இந்தியர் எதிர்ப்பு இயக்கம்

ஏடன், மே 25—

ஏடன் சர்க்கார் சர்வீஸில் ஏராளமான பேர்கள் உபதவியில் இருக்கிறார்கள் என்றும், ஏடனில் பிறந்தவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றும் ஏடன் சங்கம் ஏடன் சர்க்காருக்கு ஒரு மகஜரை அனுப்பியிருக்கிறது

ஏடனில் பிறந்தவர்கள் தக்க யோக்யதாம்சம் பெரும்படியான வசதிகளை சர்க்கார் அளிக்க வேண்டும் என்று அம்மகஜரில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஏடனின் வர்த்தகம் அநேகமாக முழுவதுமே இந்தியர் கைவசமே இருக்கிறதென்றும் இதனால் ஏடன் வியாபாரிகளின் நலன் பாதிக்கப்படுகிறதென்றும், இவைகளை சர்க்கார் கவனித்து தக்கது செய்ய வேண்டும் என்று அம்மகஜரில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

ஸிரியாவிற்குள் யூதர்கள் நுழையத் தடை

டமாஸ்கஸ், மே. 25—

ஸிரியாவிற்குள் அயல்நாட்டிலிருந்து யூதர்கள் எவரும் நுழைக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கின்றனர். லெபனீஸ் யூதர்களையும் இந்த தடை உத்திரவு கட்டுப்படுத்தும் —ஜனோம்

முடியாட்சியைக் கவிழ்க்க புரட்சி

குவெட்டா, மே 25—

இப்போதுள்ள ஆப்கன் சர்க்காரைக் கவிழ்க்கும் நோக்கத்துடனேயே ஜனநாயகக்கட்சி ஆப்கனிஸ்தானத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

சதி திட்டம் கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 60 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் ராணுவ அதிகாரிகள், மாணவர்கள். மலை ஜாதி சர்தார்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தக் கைதுகளை ஆட்சேபித்து 20,000 மலை ஜாதியினரை தங்கள் கைக்குள் வைத்துள்ள சர்தார்கள் ஒரு கூட்டம் நடத்துகின்றனர்.

லார்ட்வேவல் காலமானார்

இந்திய வைஸ்ராயாகவும், ராணுவ தளபதியாகவும் இருந்தவர்

லண்டன், மே 25—

இந்தியாவின் முன்னாள் வைஸ்ராயும், முக்கிய ராணுவ தளகர்த்தருமான லார்ட் வேவல் சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து நேற்று காலமானார். அவருடைய வயது 67. சில நாட்களுக்கு முன் அடிவயிற்றில் "ஆபரேஷன்" செய்த காரணத்தால் இவருடைய நிலைமை சில நாட்களாகவே கவலைக்கிடமாகத்தான் இருந்தது.

இரண்டாவது உலகப் போரின்போது மத்தியகிழக்கு ராணுவ தளபதியாக இருந்த தோழர் வேவல் பல நெருக்கடியான நிலைமைகளைச் சமாளித்து உலகப் பிரசித்தி பெற்றார். ஆப்ரிக்காவில் இத்தாலியப் படைகளை முறியடித்து, யுத்தத்தை இழந்துவிட்டோம் என்ற மனச் சோர்வடைந்திருந்த பிரிட்டிஷ் மக்களுக்கு வேவல் புத்துயிர் அளித்தார்.

1901 லிருந்து ராணுவச் சேவையில் ஈடுபட்டு பல பதவிகளை வகுத்து 1941-ல் இந்தியாவின் ராணுவ தளபதியாக அவர் நியமிக்கப்பட்டார். 1943-ல் தோழர் வேவல் இந்தியாவின் வைசராயாக லார்ட் லின்லித்கோவுக்கு பதில் நியமிக்கப்பட்டு, இந்திய உபகண்டத்துக்குச் சுதந்திரம் வழங்குவதற்கான பிரச்சினை அவர் கையில் ஒப்படைக்கப்பட்டது. அச்செய்கையில் இவர் வெற்றி பெறாததால் 1947-ல் லார்ட் மவுண்ட்பேட்டன் வைசராயாக நியமிக்கப்பட்டார். இவருடைய உத்தியோகவாழ்வு அத்துடன் முடிந்து விட்டதென்றே கூறலாம்

தோழர் வேவல் இலக்கியத்திலும் கவிதை எழுதுவதிலும் திறமை பெற்றிருந்தார்,

கம்யூனிஸ்டு சீனாவுக்குட்பட்டு திபெத்துக்கு சுதந்திரம்

—(0)—

மா-ஸே-துங்கைக் காண தூதுகோஷ்டி செல்கிறது

போர்மோஸா, மே. 25—

கம்யூனிஸ்டு சீனாவுடன் எத்தகைய உறவைக்கொண்டிருப்பது என்பதைக் குறித்து ஜெனரல் சியாங்கேஷேக்கைக் கலந்து ஆலோசிப்பதற்காக ஒரு தூதரை திபெத்துக்கு அனுப்பியிருப்பதாக சொல்லப்படுகிறது.

கம்யூனிஸ்ட் ஆட்சியில் அமைதியாக திபேத் சேர்ந்துவிட்டால் சுயாட்சி தருவதாக செஞ்சீன கூறியதின் பேரிலேயே தூதர் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பீகிங்கிற்கு பேச்சுவார்த்தை நடத்த ஒரு தூதரையும் அனுப்பும்படி செஞ்சீன கூறியிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு திபேத் இணங்கினாலும் இணங்காவிட்டாலும் திபேத் விடுவிக்கப்படுவது நிச்சயம் என்று பீகிங் ரேடியோ பீதியை கிளப்பியவண்ணமிருக்கிறது.

சியாங்கிடம் இப்பொழுது தூது சென்றுள்ளவர் தலாய் லாமாவின் சகோதரர் டியோலா தாண்டப் என்று கூறப்படுகிறது

மாஸேதுங்குடன் திபேத் உடன்படிக்கை

ஹாங்ஹாங், மே 25—

8 பேர்கள்கொண்ட திபேத் தூதுகோஷ்டியினர் செஞ்சீன அதிகாரிகளை சந்தித்துப் பேசுவதற்காக செல்வர் என்றும் இவர்கள் கல்கத்தாவிலிருந்து ஜூன் 5-ந் தேதி இங்கு வந்து சேருவர் என்றும் தெரிய வருகிறது. நட்பு உடன்படிக்கையை செய்து கொள்ளவே இக்கோஷ்டி திபேத் சர்க்காரால் அனுப்பப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இக்கோஷ்டியினர் செஞ்சீன அதிகாரிகளைக் காண எப்படியும் பீகிங்கிற்கே சென்றாக வேண்டும்.

மாலை மணி

சென்னை 26—5—50 வெள்ளிக்கிழமை

வெற்று ஆரவாரம்

நாட்டில் பஞ்சமும், பட்டினியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றன.

பஞ்சத்தால் அடிபட்டும், பட்டினிச் சாவைத் தழுவியும் மக்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது.

பஞ்சத்தை விரட்டவும், பட்டினியைப்போக்கவும் அரசாங்கம் தீட்டும் திட்டங்களும் அன்றாடம் வளர்ந்து கொண்டே வருகின்றன.

மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் இதுகாறும் தீட்டியுள்ள திட்டங்கள் பஞ்சத்தையும் பட்டினியையும் தேய வைக்கவில்லை; மாறாக வளர விட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

இந்த அவல நிலையைப் போக்க வேண்டி ஆட்சிப் பீடம் ஏறிய அனைவரும், ஆண்டவனிடம் வரம் வேண்டி நிற்கின்றனரே அன்றி, சொந்த அறிவு ஆற்றல்களைப் பயன்படுத்துவோராகக் காணப்படவில்லை. ஆகவே தான் இவர்களால் திறனுடைய திட்டம் தீட்ட முடியவில்லை; ஏற்ற வழியில் அவைகளை நிறைவேற்றி வைக்கவும் இயலவில்லை; நாட்டின் நலிவைப் போக்கும் வழியைக் காணவும் முடியவில்லை; ஆனால் வீண் பெருமை பேசித் திரியவும், வெற்று ஆரவாரஞ் செய்து வீண் குழப்பம் ஏற்படச்செய்யவும், ஆணவத்தை அதிகாரம் மூலம் காட்டவும் இவர்களுக்கு நன்ருகத் தெரிய வருகிறது

நாட்டில் உணவு மந்திரிகள் மாறுகிறார்கள்; அவர்களோடு அவரவர் திட்டங்களும் மாறுகின்றன; ஆனல் உணவின் நெருக்கடி நிலைமை மட்டும் இன்னமும்மாறியபாடில்லை.

முன்னாள் இந்திய உணவு மந்திரி ஜெயராம்தாஸ் தௌலத்ராம், 'ஜெனரலிஸிமோ' தௌலத்ராமாகத் தன்னைக் கருதிக்கொண்டு ராணுவ முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்க திட்டம் இட்டார். நாட்டின் உணவு நிலைமை பின்னும் கீழ்நோக்கிச் சென்றதேயல்லாமல், சரிப்பட்டுவரவில்லை.

இப்பொழுது தோழர் கே. எம். முன்ஷி இந்திய உணவு மந்திரி பீடத்தில் ஏறி நின்று, கனவுகள் பல காண்கிறார், அவைகளை ஆரவாரமாகக்கொட்டுகிறார்.

அந்நிய நாடுகளிலிருந்து உணவு இறக்குமதியை அடியோடு நிறுத்த சுதந்திரப் போராட்டம் ஒன்று ஆரம்பித்திருக்கிறாராம்; அதற்காக நான்கு பிரிவுகள் கொண்ட திட்டமொன்றைத் தீட்டியுள்ளாராம்; இந்தக் காதைதை வெளியிட்டுள்ளார் பம்பாய் இந்திய வர்த்தகர்கள் சபைக் கூட்டத்தில்.

நாட்டில் உணவில்லை; உணவை உற்பத்தி செய்ய வழியில்லை; வசதிகளும் இல்லை; பட்டினிச்சாவு எங்கணும் பரவிவருகிறது; இப்படிப்பட்ட கோரநிலை, இந்திய துணைக்கண்டம் முழுவதும் தாண்டவமாடிக்கொண்டிருக்கும்போது, எப்படி உணவைக் கொடுத்து எங்ஙனம் மக்களைப் பட்டினிச் சாவினின்றும் காப்பாற்றுவது என்ற சிந்தனையில் புகவேண்டிய அரசாங்கம், அந்நிய நாட்டு உணவை இறக்குமதி செய்வதில்லை என்ற வீம்புக் கொள்கையை விடாப்பிடியாகக் கொண்டிருக்கிறது

நாட்டில் உணவு உற்பத்திப் பெருகினால், தானாகவே அந்நியநாட்டு உணவு இறக்குமதி குறையத்தானே செய்யும்! உணவு உற்பத்திப் பெருக வழியேற்படவில்லை, உணவு கிடைப்பது அரிது என்ற நிலை இருக்கும்போது, அந்நிய நாட்டு உணவாயினும் அவற்றை வரவழைத்து மக்களின் உயிரைக் காப்பாற்றித் தர வேண்டியது அல்லவா அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். அதைவிட்டுவிட்டு 1951 முதல் உணவை இறக்குமதி செய்வதில்லை என்ற குருட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் அரசாங்கத்தை என்னவென்று சொல்வது' 1951-ம் ஆண்டுக்குள் உள்நாட்டு உற்பத்தி போதுமான அளவுக்குப் பெருகிவிடும் என்று கூறுவதற்கு அரசாங்கத்திடம் உறுதி யாவது இருக்கிறதா? என்றால் அதுவும் இல்லை. உணவுப் பஞ்சத்தையும், பட்டினிச் சாவையும் போக்க வேண்டுமானல், அந்நிய நாட்டு உணவை இறக்குமதி செய்வதைத் தவிர வேறு என்ன வழியிருக்கிறது? உணவு, அந்நியநாட்டுப்பொருள்என்ற காரணத்துக்காக அதனைத் தியாகம் செய்துவிட்டுச் சும்மா இருக்க யாராலும்இயலாதே! ஒருநாள் உணவை ஒழியுங்கள்'' என்று உபதேசம்புரிகின்றனர்! மந்திரி முன்ஷி "ருசியைத்தியாகம் செய்துவிட்டு எது கிடைத்தாலும், எது கொடுக்கப்பட்டாலும் அவற்றை உண்ணுங்கள்'' என்று இப்போது உபதேசம் புரிகிருர்! இப்படிப்பட்ட உபதேசங்களைச் சமாதான காலத்திலும் புரிந்து கொண்டு காலந்தள்ள ஒரு அரசாங்கம் எண்ணுமேயானால், அதனை நாகரிகமுள்ள சர்க்கார் என்று எப்படிக்கூற முடியும்?

அடுத்த 19 மாதங்களில் மொத்தம் 20,00 000 ஏகராக் களைச் சாகுபடிக்குக்கொண்டு வரவேண்டுமாம்; அதோடு 3000 குழாய்க் கிணறுகளை வெட்ட வேண்டும்; 30 00,000 டன் தானியங்களையும், 12 00 000 பேல் பருத்தியையும், 28,00,000 பேல் சணலையும் உற்பத்திசெய்ய வேண்டுமாம் இவற்றையெல்லாம், அந்நியநாட்டு உணவு இறக்குமதியை 1951-ம் ஆண்டோடு நிறுத்தப்போகும் மந்திரியார் கே. எம் முன்ஷி கூறுகிருர். யார் உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? வசதி எங்கே? வழி எங்கே? இவற்றிற்கெல்லாம் விளக்கம் எங்கே? ஏதும் இல்லாமல், 'அதிசயங்கள்' காண விரும்புகிருர் அமைச்சர்!

அந்நியநாட்டு உணவு இறக்குமதியை நிறுத்திவிடுவதால், சென்னை மாநிலம்போன்ற பகுதிகளில் எவ்வளவு விபரீதங்கள் விளைகின்றன? சென்னையை அடுத்து கடலுக்கு அப்பால் பர்மா இருக்கிறது. பர்மாவில் அரிசி ஏராளமாக மிஞ்சிக்கிடக்கிறது. அரிசியை சாதகமான குறைந்த விலைக்கே அந்நியநாடுகளுக்கு அனுப்ப பர்மா தயாராக இருக்கிறது என்று அண்மையில் தான் சென்னை வந்த பர்மா நாட்டின் பிரதமர் தாகின்நூ அறிவித்தார். சென்னை தனக்கு வேண்டிய பற்றாக்குறை அரிசியை பர்மாவிடமிருந்து நல்லதாக, எளிய முறையில், குறைந்த விலையில் பெற்றிருக்கலாம். ஆனல் இந்திய அரசாங்கத்தின் குருட்டுக் கொள்கையாலும் ஆணவ அதிகார பலத்தாலும் சென்னை மாநிலம் ரூபாய் 105 இலட்சம் அதிகப்படியாகக் கொடுத்து, புளுத்துப் போன நாற்றமடிக்கும் உத்தரப்பிரதேச அரிசியை வாங்க வேண்டிய அவசியத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஏன் இந்தக் குறைபாடு? சென்னை வடநாட்டு மத்திய அரசாங்கத்திற்கு அடிமைப்பட்டிருப்பதல்லவா?

நாட்டை நல்வழியிற் நடத்திச் செல்வதற்குத் திறமுடையோர் பலர் இருந்தும், அவர்கள் கையில் ஆட்சி போய்ச் சேராமல், ஆதிக்கம், அதிகாரம், அரசியல் சூதாட்டம் தெரிந்தவர்கள் கையில் சிக்கியுள்ளதால் நாடு இந்த அளவுக்கு எல்லாவகையிலும் சீரழிவுபட்டுக் கிடக்கிறது.

'ரூபாய்க்கு இரண்டுபடி அரிசியை மக்கள் பெற்ருல், அவர்களின் பெரும்பாலான பொருளாதாரக் குறைபாடு நீங்கிவிடும்'' என்றுதமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜர் கூறுகிருர். ரூபாய்க்கு இரண்டுபடி அரிசி கிடைத்தால் மக்களிடம் பொருளாதார நெருக்கடி அவ்வளவு இருக்காது என்பதைத் தெரிந்துகொள்ள அபாரமான அறிவு தேவையில்லை, சாதாரணமானவர்களே புரிந்துகொள்ளக்கூடும். இதை அறிவுறுத்த காமராஜ் போன்ற தலைவர் தேவையில்லை! அவரிடம் ஏனையோர் எதிர்பார்ப்பது, அந்நிலையை அடைய அவர் என்ன வழி வசதி, வாய்ப்பு கண்டு பிடித்துச் சொல்கிருர் என்பதேயாகும் ஆனல், அவர் அதற்குச் சொல்வது என்னவென்ருல் **"எப்பொழுது அது நடைமுறையில் வரும் என்று எனக்குத் தெரியவில்லை''** என்று கூறுகிருர் இத்தகைய பதில்தான் எல்லோருக்கும் தெரியுமே. இதைத் தோழர் காமராஜர் அவ்வளவு கஷ்டப்பட்டுக் கூறவேண்டியதில்லையே! அவர்தான் என்ன செய்வார், அவருக்குத் தெரிந்தால்தானே! இப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் அவருக்கு எப்படி புரியும்!

உணவு நெருக்கடியைத் தீர்ப்பதாகக் கூறி, ஆட்சிப்பீடத்திலிருந்து வெற்று ஆரவாரம் கேட்கிறதேயல்லாமல், வேண்டும் வசதி எதுவும் செய்யப்படவில்லை! ஏன் என்று ஆளவந்தார்களைக் கேட்க முடியாது—கேட்கக் கூடாது, காரணம் அவர்களெல்லோரும் 'தியாகிகள்'!

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

27 - 5 - 50

...மூர்:—சி. பி. சிற்றரசு.

28 - 5 - 50

சங்கராபுரம்:—என். வி. நடராசன், இரா. இளம்வழுதி, ப. உ. சண்முகம்.

29 - 5 - 50

கிருஷ்ணகிரி:—சி. பி. சிற்றரசு.

தலையைவெளியில் நீட்டாதே!

ரயில் பிரயாணிகளுக்கு எச்சரிக்கை

சென்னை, மே 25—

சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் செல்லும் எலெக்ட்ரிக் டிரெயினில் செல்பவர்கள் தலையை வண்டிக்கு வெளியே நீட்டக்கூடாது என்றும் அப்படி நீட்டினல் மின்சாரக் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளாக நேரிடும் என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதை பொதுமக்கள் நன்கு புரிந்துகொள்வதற்காக கோடம்பாக்கம் ரயில்வே சிப்பந்திகள் இரண்டு புரியும்படி ஒரு சித்திரத்தை எழுதி காட்சிக்கு வைத்திருக்கின்றனர். தலையை வண்டியிலிருந்து வெளியே நீட்டினல் எப்படி விபத்து நேரிடுகிறது என்பதை தத்ரூபமாக அம்படியான சாதனம் சித்திரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஓடும் வண்டிக்கும் மின்சாரக் கம்பத்திற்கும் இடையே உள்ள தூரம் 24 அங்குலம்தானம். ஆகவே சராசரி 5 அடி 3 அங்குலம் உயரமுள்ளவர்கள் தலையை நீட்டி எட்டிப்பார்த்தால் 26 அங்குல தூரம் வரையில் முன்னல் உடம்பு சாய்கிறதென்றும் விபத்துக்குள்ளாக வேண்டியே நேரும் என்றும் கூறப்படுகிறது.

கோடம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷன் மாஸ்டர் தோழர் தங்கவேல் இதைபற்றி கூறுகையில் சென்ற சில மாதங்களில் இம்மாதிரி 5 விபத்துக்கள் ஏற்பட்டு விபத்துக்குள்ளானவர்கள் மாண்டனர் என்றும், ஆகவே வண்டியிலிருந்து எட்டிப்பார்க்காதே என்ற பிரசாரம் மிக அவசியம் என்றும் கூறினர்.

இந்தோ-சீன எல்லையில் செஞ்சனத் துருப்புகள்

குவாங்ஸியில் பிரமாத முஸ்தீபுகள்

லண்டன், மே. 25—

இந்தோ-சீன எல்லையில் செஞ்சீனத் துருப்புகள் ஏராளமாகக் குவிவதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது.

குவாங்ஸி மாகாணத்தில் கூடியிருக்கும் மேற்பட்ட துருப்புகள் பிரமாத யுத்த முஸ்தீபுகளைச் செய்து வருவதாகவும் அச்சேனைகள் கூடியுள்ள தேன்சீனவில் எல்லையை நோக்கி ரஸ்தாக்கள் அமைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தினமும் இந்தோசீன எல்லையை 1000 சீன கம்யூனிஸ்ட் துருப்புகள் கடந்து வருவதாக கூறப்படுகிறது. ஆனல் இதை பிரெஞ்சு வட்டாரங்கள் மறுக்கின்றன. நிலைமை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகின்றன. —ராய்ட்டர்

பல்கேரியா முன்னள் மன்னரைக் கொலை செய்ய சதி

லண்டன், மே. 25—

பல்கேரியாவின் மன்னர் ஸிமியோனைக் கொலை செய்ய போடப்பட்டிருந்த சதியை எகிப்திய பாதுகாப்பு போலீசார் கண்டுபிடித்து தடுத்து விட்டதாக கூறப்படுகிறது.

முன்னள் மன்னர் ஸிமியோனும் அவருடைய தாயார் ராணி ஜியோவன்னவும் 1946ல் அலெக்ஸாண்டிரியா வந்து சேர்ந்தனர். அப்பொழுது முதல்கொண்டே அவர்கள் அங்கேயே இருந்து வருகின்றனர். —ராய்ட்டர்

மலேயாவில் வாழும் மக்கள்

ஓரே இனத்தவராக்க முயற்சி

குலாலம்பூர், மே 25—

மலேயாவில் வசிக்கும் இந்தியர் சீனர் முதலிய யாவரும் மலேயர் என்ற ஓரே இனத்தவராக இருக்கவேண்டும் என்பதற்கான திட்டம் ஒன்றை மலேயா சீனர் சங்கம் தயாரித்திருக்கிறது. பிரிட்டிஷ் கமிஷனர் மக்டானல்டிடம் இத்திட்டம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிகிறது.

சோஷலிஸ்டுகள் நிர்மாணத் திட்டம்

கிராம சேவை செய்ய தொண்டர் படை

புதுடில்லி, மே 25—

டில்லியிலுள்ள சோஷலிஸ்டுகள் ஹிந்துஸ்தான் பஞ்சாயத்து ஸ்தாபனத்துடன் சேர்ந்து கிராமப் பகுதியில் சேவை செய்ய தொண்டர் படையை அமைத்திருக்கின்றனர்.

இத் தொண்டர் படையினர் சர்க்காரின் "அதிக உணவு விளைவு செய்யும்'' திட்டத்தை வெற்றிகரமாகச் செய்ய உதவுவதுடன், ரஸ்தாக்கள் போடுவது கிராமங்களின் சுகாதாரத்தைப் பாதுகாப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுவர்.

சோஷலிஸ்ட் கட்சியிலுள்ள அங்கத்தினர்களும் தினம் ஒரு மணி நேரம் இந்த சேவையில் ஈடுபடுவர்.

இந்திய சேனதிபதி கரியப்பாவுக்கு புது பதவி?

லண்டன், மே 25—

தென்கிழக்கு ஆசியாவுக்கு ஏற்படுத்தவிருப்பதாகக் கூறப்படும் புது கமாண்டின் சுப்ரீம் தலைவர் பதவி இந்திய சேனதிபதி ஜெனரல் கரியப்பாவுக்கு அளிக்கப்படும் என்ற செய்தி ஆதாரமற்றது என்று விஷயமறிந்த இந்திய வட்டாரங்களில் மறுக்கப்படுகிறது.

வழக்கமாக கலந்து பேசுவதற்காகவே ஜெனரல் கரியப்பா லண்டன் வந்து சேர்ந்திருக்கிருர்என்று இந்திய ஹவுஸ் அதிகாரி ஒருவர் கூறினர்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு		2682—9—6
சா. கோவிந்தன்	சேத்துப்பட்டு	1—0—0
இ. ராமு	,,	0—8—0
சா. கண்ணன்	,,	0—8—0
எத்திராசன்	,,	0—8—0
அ. சனுர்த்தனம்	,,	0—8—0
க. நாகராசன்	,,	0—8—0
சி. டி. கோவிந்தன்	,,	0—8—0
வி. எம். ராமு	,,	1—0—0
ப. வீரப்பன்	நாமக்கல்	2—0—0
இராமலிங்கம்	,,	0—8—0
கொ. சி. கருப்பன்	,,	1—0—0
கே. வி. நல்லுசாமி	,,	1—0—0
எஸ். கே. பழனிச்சாமி	,,	1—0—0
சி. இராமசாமி	,,	0—8—0
கொ. மொ. பெருமாள்	,,	1—0—0
ம. குப்புசாமி	,,	1—0—0
கொ. சி. [illegible]	,,	0—8—0
ப. சுப்பராயன்	,,	1—0—0
எஸ். சின்னையா	,,	1—0—0
பி. ராமசாமி	,,	0—8—0
வி. கே. சின்னுசாமி	,,	1—0—0
எஸ். சின்னுசாமி	,,	1—0—0
பி. எம். பாபுபிள்ளை	சென்னை	2—8—0
வி. சுப்ரமண்யம்	,,	0—8—0
கே. வி. குருசாமி	,,	0—8—0
பி. பெருமாள்	,,	0—8—0
பி. கே. கயிலியப்பன்	,,	0—8—0
எம். பரமாத்மா	,,	0—8—0
எஸ். குப்புசாமி	மீர்சாபேட்டை (சென்னை)	1—0—0
கே. கோவிந்தசாமி	,,	1—0—0
கே. வி. ராஜண்ணன்	குமாரமங்கலம்	2—0—0
எஸ். கே. கந்தசாமி	,,	1—0—0
மூ. ஆறுமுகம்	சென்னை	1—0—0
எம். கே. பெருமாள்	முல்லிவாக்கம்	10—0—0
வி. ரங்கசாமி	கோவை	15—0—0
		2736—9—6

இனி நடப்பவை

மறுமலர்ச்சி சொற்பயிற்சி மன்றம், சைதாப்பேட்டை:—இம்மன்றத்தின் சொற்பயிற்சிக்கூட்டம் 26—5—50 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு சடையப்பமுதலித்தெருவிலுள்ள வள்ளுவர் மன்றத்தில் நடைபெறும்.

• • •

வாணியம்பாடி:—சோனுமேல தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் சார்பில் 28—5—50 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பி. பார்த்தசாரதி அவர்களின் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும். காமக்கல் தமிழறிஞர் ஆர். பி. இராமச்சந்திரனுர் மாகாணத் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனக் காரியதரிசி எம். கிருஷ்ணசாமி தாலுக்கா பெடரேஷன் தலைவர் டி. அருணகிரி உபாசகர், வட ஆற்காடு ஜில்லா சம்மேளனத் தலைவர் எம். ஆதிமூலம், ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

• • •

சங்கராபுரம்:—திராவிட முன்னேற்றக்கழக துவக்கவிழா 28-5-50 ஞாயிறு மாலை 6 மணிக்கு தோழர் பி. கே. பாலுசாமி அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் பி. பலராமன் அவர்கள் கழகக்கொடி ஏற்றுவார். தோழர்கள் ப. உ. சண்முகம், என். வி. நடராசன், இரா. இளம்வழுதி எம். ஏ. ஓய். எஸ். அருணாசலம், குமார தனிகாசலம், ப. இளக்குவன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

• • •

தி. மு. கழக துவக்கவிழா:—29—5—50 திங்கட்கிழமை மாலை 6-மணிக்கு கிருஷ்ணகிரி புதுப்பேட்டை பெட்ரோல் பங்குக்கெதிர

மாணவர்களுக் உல்லாச பிரயாண அடையாள கார்டுகள்

சில வசதிகள் சலுகைகள் கிடைக்கும்

லண்டன், மே 25—

பிரிட்டனிலுள்ள மாணவர்கள் ஆசிரியர்கள் விஞ்ஞானிகள் இவர்களுக்கு 'உல்லாச அடையாள சீட்டுகள்' அளிக்கப்படுமோம். இந்த சீட்டு உள்ளவர்களுக்கு பிரிட்டன் பெல்ஜியம், பிரான்ஸ், ஹாலந்து லக்ஸம்பர்க் ஆகிய 5 நாடுகளில் போதிய சலுகைகள், வசதிகள் அளிக்கப்படுமோம்.

ஜார்டனின் புது ஸ்டாம்புகள்

அம்மன், மே 25—

உலக 'ஏர் மெயில்' யூனியனில் ஒரு அங்கத்தினராக சேர்ந்ததற்காக புது ஸ்டாம்புகளை வெளியிட ஜார்டன் சர்க்கார் தீர்மானித்திருக்கிறது. ஜார்டன் விஸ்திரிப்புவிஷயமாகவும் புது ஸ்டாம்புகள் விநியோகிக்கப்பட இருக்கின்றன.

ரங்கூனில் தேசிய மியூஸியம்

ரங்கூன், மே. 25—

ரங்கூனில் தேசிய மியூஸியம் ஒன்றை ஏற்படுத்தவதென்று ரங்கூன் முனிசிபல் கார்ப்பரேஷன் தீர்மானித்து இதற்கான நடவடிக்கைகள் எடுக்க ஒரு கமிட்டியையும் நியமித்திருக்கிறது.

சமயநாளைத்தில் திராவிடமுன்னேற்றக் கழகத் துவக்கவிழாவில் பொதுக்கூட்டம் ம. ர. செம்மோரான் அவர்களின் தலைமையில் நடைபெறும். வேலூர் "தீப்பொறி" ஆசிரியர் பி. வி. சித்ரசு பேசுவார். ஒலிப் பெருக்கி உண்டு.

ஆசிரியருக்கு முடங்கல்:

சர்க்கார் அச்சகத்தில் ஆரிய ஆதிக்கம்

ஐயா,

சென்னை அரசாங்க அச்சு அலுவலகத்தில் தற்காலிக ஸ்பெஷல் ஆர்கனைசராக இருந்து வரும் சுப்ரமணிய அய்யர் என்பவர் அலுவலகத் தொழிலாளிகளுக்குத் தொல்லைகொடுத்து வருகிறார் என்பது உண்மையா?

சிறு குற்ற மொன்றைக் காரணமாகக் காட்டி 24 ஆண்டுகள் சர்வீசில் இருந்துவந்த தொழிலாளி ஒருவரை முறைப்படி தண்டிக்காமல் வேலையை விட்டே நீக்கிவிட்டார் என்பது உண்மையா?

இந்த பார்ப்பன அதிகாரி முன்னர் சங்கத்திலிருந்து நீக்கப்பட்ட அம்மாசாமி என்னும் பார்ப்பனரை மீண்டும் சங்கக் காரியதரிசியாக்கி, மற்றும் பல அதிகாரிகளையும் கூட்டி வைத்துக்கொண்டு தொழிலாளருக்கு எதிரிடையாக ஒரு போட்டிச் சங்கத்தை நிறுவி தொழிலாளரிடையே பிளவும் பகைமையும் வளரவழி வகுத்து வருகிறார் என்பது உண்மையா?

சிலநாட்களுக்கு முன் சென்னை அரசாங்க அச்சு அலுவலகத்தைப் பார்வையிடவந்த கமிட்டி ஒன்றுக்கு இந்த சுப்ரமணிய அய்யரே தலைவராக இருந்தது உண்மையா?

சர்க்கார் அச்சகம் மேற்கொள்ளவேண்டிய ஒருவேலைத் திட்டத்தை 'இந்து' பத்திரிகாலயத்தில் $7\frac{1}{2}$ லட்சம் ரூபாய் செலவில் அச்சிட செய்ய தோழர் சுப்பிரமணிய அய்யர் சிபார்சு செய்தார் என்பது உண்மையா?

பின்னர் அதேவேலை திட்டத்தை 3 லட்ச ரூபாய் செலவில் சர்க்கார் அச்சகமே மேற்கொண்டது என்பது உண்மையா?

ஐகோர்ட் வேலைகள் பல சர்க்கார் அச்சகத்திலேயே நீண்டகாலமாக செய்யப்பட்டு வந்ததும் அவை தற்போது வெளி அச்சகங்களுக்குக்கொடுப்பதும் உண்மையா?

இதனால் செலவு அதிகரிப்பதுடன், சர்க்கார் அச்சக வேலையை நம்பிவாழும் அச்சுத் தொழிலாளர் சுமார் 400 க்குமேற்பட்டவர்கள் வேலை இழக்க நேரிடுகிறது என்பது உண்மையா?

இப்படி வெளி அச்சகங்களுக்கு வேலையைக் கொடுப்பதற்கு மேற்படி பார்ப்பன அதிகாரியின் சுயநலம் காரணம் என்று சொல்லப்படுவது உண்மையா?

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளால் அரசாங்க அச்சகத் தொழிலாளர் மிகவும் மனம் நொந்து வருந்துகிறார்கள் என்பது உண்மையா? ஆட்சியாளர் இதனை கவனிப்பார்களா?

ஆர். அங்கமுத்து
சென்னை.

வெட்டுக்கிளியை ஒழிக்க எகிப்து முயற்சி

கெய்ரோ, மே. 25—

வெட்டுக்கிளி படையெடுப்பை ஒழிக்க எகிப்து தயாராகவே இருக்கிறது. என்று எகிப்து விவசாய மந்திரி மைக்ரே அகமத்ஹமீஸா கூறினர்.

எகிப்தில் எங்கேயாவது வெட்டுக்கிளிகள் தோன்ற ஆரம்பித்தால் ராணுவ விமானங்கள் விவசாய அதிகாரிகளின் உபயோகத்திற்கு அனுப்பப்படும் என்றும் விவசாயிகளுக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் யுத்த இலாகா அளிக்கும் என்றும் அவர் கூறினர்.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

கோவை "வள்ளுவர் பந்தலில்"

27-5-50 & 28 5-50

தலைவர்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

துவக்குபவர்

நாவலர் எஸ். எஸ். பாரதியார்

மதுரை ஜில்லா

தி. மு. க. முதல் மாநாடு

ஜூன் 10, 11 சனி ஞாயிறுகளில்

சோழவந்தான் 'செல்வம் பந்தலில்'

நடைபெறும்

சனி பிற்பகல் 4-மணிக்கு மாநாடு ஆரம்பம்

தலைவர்:-தோழர் ஈ. வெ. கி. சம்பத்

துவக்குபவர்:-தோழர் கே. கே. நீலமேகம்

பொதுச்செயலாளரும் கழகச்சொற்பொழிவாளர்களும் கலந்துகொள்கிறார்கள்

★

பிரசார நாடகங்கள்

10—6—50 சனிக்கிழமை இரவு

மதுரை அழகரடி புதுமலர்ச்சி நாடக மன்றத்தார் நடிக்கும்

"சிலை" நாடகம்

11—6—50 ஞாயிற்றுக்கிழமை இரவு

கே. ஆர். ராமசாமி, சி. என். ஏ. நடிக்கும்

"சந்திரமோகன்" நாடகம்

மாநாட்டுக் கட்டணம்:—

வரவேற்பாளர் ரூ. 5. பிரதிநிதி ரூ. 2

பார்வையாளர் ரூ. 1

வரவேற்பாளர் சீட்டு பெற்றவர்களுக்குச் சாப்பாடு உண்டு.
மற்றவர்கள் சாப்பாட்டுக்குத் தனி டிக்கட் பெறவேண்டும்.

இரு நாட்களுக்கும்
சாப்பாடு கட்டணம் ரூ. 2.

10—6—50 இரவு உணவும் 11—6—50 காலை சிற்றுண்டியும் சேர்ந்துத் தனிச் சீட்டு ரூ. 1

11—6—50 பகல் உணவும், இரவு உணவும் சேர்த்துத் தனிச் சீட்டு ரூ. 1

நாடகங்களுக்குக் கட்டணம் இல்லை
பெண்களுக்கு மாநாட்டு கட்டணம் இல்லை
உணவுக் கட்டணம் மட்டும் உண்டு

மாநாட்டு அலுவலகம்:—324 அழகரடி, மதுரை.

எஸ். முத்து, என். முத்து — செயலாளர்கள்.
தா. ஆவுடையப்பன், — வரவேற்புத் தலைவர்.
எம். அய்யாசாமி, — விளம்பர உறுப்பினர்.
இ. கர்த்தான். — பொருளாளர்.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

திருவாதவூர்

18—5—50 வியாழக்கிழமை மாலை 6-30 மணிக்கு மதுரை மாவட்டம் திருவாதவூர் தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் மதுரைத் தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. நடராசன் அவர்கள் சிறிது நேரம் பேசிய பின், விருதைத் தோழர் ஏ. வி. பி. ஆசைத் தம்பி அவர்கள் இயக்கக் கொள்கைகளை விளக்கியும் காங்கிரஸ்காரர்களின் பித்தலாட்டச் செயல்களைக் கண்டித்தும் சுமார் 1-30 மணி நேரம் உணர்ச்சிகரமான சொற்பொழிவு நிகழ்த்தினர். கூட்டத்திற்கு உள்ளூர் வெளியூர்களிலிருந்து சுமார் 2000-க்கு மேற்பட்ட மக்கள் அக்கிராமத்தில் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது. பக்கத்திலுள்ள மேலூர், அழகிச்சிபட்டி, ஒத்தக்கடை, திருப்பூவணம் பகுதிகளிலிருந்து சுமார் 250 பேர் சைக்கிள்களிலும், வண்டிகளிலும் இத் தோழர்கள் பெருவாரியாக வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இவ்வூருக்கு இது இரண்டாவது தி. மு. கழகக் கூட்டம் ஆகும்.

சென்ற மாதத்தில் முதல் கூட்டம் நடைபெற்ற பின்னர் மதுரை ஜில்லா போர்டு தலைவர் தோழர் என். ஆர். தியாகராஜன், தோழர் கக்கன், எம். எல். ஏ. உட்பட பல காங்கிரஸ்காரர்கள் ஒரு கூட்டம் நடத்தி இனிமேல் இவ்வூரில் தி. மு. கழகத்தார் கூட்டம் நடத்தினால் கூட்டத்தைக் கலையுங்கள், நடத்த அனுமதிக்காதீர்கள் என்று பேசினார்களாம். அதை முன்னிட்டு ஒரு காங்கிரஸ்காரர் கூட்டம் நடக்கும் பொழுது ஒன்றிரு கற்களை வீசிக் குழப்பம் செய்ய முயன்றது அவ்வூர் பொதுமக்களின் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டதுடன் கூட்டத்தைப் பன்மடங்கு வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவியாக இருந்தது. இனிமேல் அந்த ஊரில் காங்கிரசுக்கு கொஞ்சநஞ்சம் இருந்த ஆதரவும் அறவே போய்விட்டது. காங்கிரசுக்கு அங்கு அவர்களே சவக்குழி தோண்டிக் கொண்டார்கள் என்று அந்த வட்டாரம் முழுதும் பேசிக் கொள்ளப்படுகிறது.

இராமநாயகன்பேட்டை

இ.நா. பேட்டை, மே 16—

இராமநாயக்கன்பேட்டையில் தோழர் சி. எ. துரைசாமி தலைமையில் விவசாயிகள் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. இச்சங்கத்திற்கு கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. தலைவர் சி. எ. துரைசாமி துணைத்தலைவர் வ. முத்துசாமி, பொருளாளர்:- வடமலை, செயலாளர்:- சுப்ரமணி; துணைச் செயலாளர்:- ஆர். பி. சின்னராசு ஏனைய செயற்குழு உறுப்பினர் 20 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் ஆர். வி. சண்முகம், வி. என். தத்தப்பன் ஆகியோர் விவசாயின் தேவைப் பற்றி சொற்பொழிவாற்ற கூட்டம் இனிது முடிந்தது.

மேங்காட்டுப்பொட்டல்

21-5-50 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு மதுரை மேங்காட்டுப்பொட்டலில் மதுரை நகர் தி. மு. கழகம் மத்திய வட்டார உட்கிளையின் சார்பில் தோழர் எம். அய்யாசாமி அவர்களின் தலைமையில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. விருதைத் தோழர்கள் மூ. இளஞ்செழியன், வணங்காமுடி, எஸ். முத்து ஆகியவர்கள் பேசிய பின், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கியும், தொழிலாளர்களுக்குக் காங்கிரஸ் சாதித்தது என்ன என்பதைப் பற்றியும் மிக விளக்கமாக சுமார் 1-30 மணி நேரம் நீண்ட அரிய சொற்பொழிவாற்றினர். பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

திருமால்பூர்

திருமால்பூர், 19—

18-5-50 காலை 8-30 மணிக்கு கழகக் கொடியுடன் ஊர்வலம் வந்து தோழர் செ. எ. முத்தண்டனூர் அவர்களால் கொடி ஏற்றப்பட்டது.

மாலை 5-30 மணிக்கு தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. காஞ்சிமணிமொழியார், என். வி. நடராஜன் ஆகியவர்கள் ரயில் நிலயத்திலிருந்து வந்ததும், கழகத் தோழர்கள் எதிர்கொண்டு வரவேற்றளித்து கழகக் கட்டிடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பிறகு மாபெரும் ஊர்வலம் வந்து கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தோழர் காஞ்சிமணிமொழியார் அவர்களை கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்திக்கொடுக்கும்படி கழகச் செயலாளர் ச. குமாரசாமி கேட்டுக்கொண்டார். அதை கி. என். ஆடியபாதம் ஆமோதித்தார். தோழர் செயராமன் அவர்களால் திராவிட நாட்டுப்பண் பாடப்பட்டது. தலைவர் முன்னுரை பேசிய பின் பள்ளிச்சிறுவர்கள் முறையே ராமலிங்கம் "நல்ல தீர்ப்பு" நாகலிங்கம் "காலமும் கருத்தும்" என்பதைப்பற்றி பேசினார்கள். எ. எல். சி. சஞ்சீவியவர்கள் பேசிய பின். என். வி. நடராசன் அவர்கள் சுமார் 1-15 மணிநேரம் சமுதாயத்தைப்பற்றி மிக விரிவாக விளக்கிப் பேசினார். கைத்தட்டல்களுக்கிடையே தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்கள் எழுந்துபேசினார். இன்றைய சமுதாயத்தாழ்வு அகலவேண்டும் என்றும், திராவிடநாட்டுப் பிரிவினை அவசியத்தைப்பற்றியும் விளக்கமுடன் சுமார் 1-30 மணிநேரம் பேசி முடித்தார். தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் வடிவேலு அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தில் சுமார் 2000 மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர்.

வாணாபாடியில் புத்தர் விழா

இராணிப்பேட்டையடுத்த வாணாபாடி கிராம சேவா சங்கத்தின் ஆதரவில் நேற்று ஆசிரமத்தில் சுடர் மகாத்மா புத்தரின் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புத்தரின் படம் அழகுடன் விளங்கியது.

விழாவிற்குத் தோழர் எ. கு. நாராயணசாமி தலைமை வகித்தார். புத்தர்பிரானது வாழ்க்கையைச் சித்தரித்துத் தோழர்கள் சம்பிரமணியன், கிருஷ்ணன், அரங்கநாதன், சங்கரன், கிருஷ்ணசாமி ஆகியோர் பேசுகையில் "புத்தர் உண்மை மதத்தை உருவாக்கிய உத்தமர், உலகச் சரித்திரமெனும் வானத்திடையே விளங்கும் விண்மீன்களுள் புத்தர் ஓர் ஒளிமிக்க சுடர் நட்சத்திரமாவார். பௌத்த நூல்கள் இன்று தமிழிடையே இருந்து தமிழைச் சிறப்பிப்பது பாராட்டற்குரியது", என்று கூறினார்கள்.

தலைவர் முடிவுரையில் அன்பின் உருவமான புத்தர் தோன்றி நமக்கு விலைமதிப்பற்ற செல்வங்களை வழங்கிச் சென்றுள்ளார் என்றும் இவைகளை மக்கள் கடைபிடித்தால் சமுதாயம் சீர்பெறும் என்றும் பேசினார். பின்னர் வந்தனோபசாரத்துடன் விழா இனிது முடிந்தது.

45-லட்சம் ஏகராவில் எள் சாகுபடி

இந்தியாவில் 1949—50-ல் எள் சாகுபடி பற்றி, ராஜ்யங்களிலிருந்து கிடைத்துள்ள தகவல்களை ஆதாரமாகக்கொண்டு மத்திய விவசாய இலாகாவைச் சேர்ந்த பொருளாதார—புள்ளிவிவர டைரெக்டரேட் தயாரித்துள்ள இறுதி மதிப்பீட்டின் பிரகாரம் இந்த ஆண்டு மொத்தம் சுமார் 45,49,000 ஏகராவில் எள் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாயும், சுமார் 3,67,000 டன் மகசூல் கிடைக்குமென்றும், தெரியவருகிறது. சென்ற ஆண்டு 45,02,000 ஏகராவில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது; 3,2,000 டன் மகசூல் கிடைத்தது. சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு சாகுபடிப் பிரதேச விஸ்தீரணம் ஒரு சதமானமும், மகசூல் 13.6 சதமானமும் அதிகரித்திருக்கிறது.

ஹிமாசல் பிரதேசம், மத்தியபாரத், மைசூர், பெப்ஸு, விந்தியப் பிரதேசம், பிகானீர், ஜெயபூர், ஜோத்பூர், ராஜஸ்தானின் மத்ஸ்யப் பிரதேசம் பிரிவுகள் ஒரிஸாவில் இணைக்கப்பட்டுள்ள சமஸ்தானங்கள் ஆகியவற்றிற்கான புள்ளிவிவரங்களும், முதல் முறையாக இந்த வருஷம் இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் சுமார் 10 லட்சம் ஏகராவில் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாயும் சுமார் 70,000 டன் மகசூல் கிடைக்குமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்னையிலும் ஹைதராபாதிலும் இரண்டாம் போகம் பற்றிய புள்ளிவிவரங்கள் இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்படவில்லை. இவை உப மதிப்பீட்டில் சேர்க்கப்படும். உப மதிப்பீட்டில் சாகுபடிப் பிரதேச விஸ்தீரணமும் மகசூல் அளவும் இறுதிமதிப்பீட்டில் இருப்பதைவிட முறையே 4 சத விகிதமும் அதிகமாக இருக்கக்கூடுமென்று முந்திய அனுபவத்திலிருந்து தெரிய வருகிறது.

பிரதேச விஸ்தரிப்பு, முக்கியமாக பம்பாய், சென்னை, சௌராஷ்டிரம், விந்திய பிரதேசம் ஆகிய இடங்களிலேயே காணப்படுகிறது. விலைவாசி கவர்ச்சியாக இருந்ததும், விதைப்புக்காலத்தில் பருவநிலைமை திருப்திகரமாக இருந்ததுமே இதற்குக் காரணமாகும். உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய இடங்களில், விதைப்பு காலத்தில் பருவநிலைமை பிரதிகூலமாக இருந்ததால் பிரதேச விஸ்தீரணம் குறைந்திருக்கிறதென்றாலும், சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மகசூல் குறைவில்லையென்றே சொல்லவேண்டும்.

கவியரசர் பாரதிதாசன் அவர்களின்

புதிய நூல்கள் !

மக்கட்பேறு — குடும்பவிளக்கு 4 — விலை 10 அணா

முதியோர் காதல் — குடும்பவிளக்கு 5 — விலை 6 அணா

கோவை மாநாட்டில் கிடைக்கும்

பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.

வறுமைக்குப் பலி!

சங்கரன்கோவில், மே 21—

இவ்வூர் ஆவுடைப்பொய்கையில் 5-வது வார்டில் குடியிருந்து வந்த தோழர் வீ. எ. சரவண முதலியார், விழுந்து தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிகிறது. மேற்படி முதலியாருக்கு 7 குழந்தைகள் இருக்கின்றனவாம், நெசவுத் தொழிலைத் தவிர வேறு எந்த வேலையும் தெரியாது சில மாதங்களாக நெசவுத் தொழிலும் சரிவர கிடைக்காமல் குடும்பம் நடத்த முடியாமல் பல தொல்லைகளுக்கு ஆளாகி பஞ்சம், பசி, பட்டினி சகிக்க முடியாமல் தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிகிறது. இது பற்றி போலீசார் புலன்விசாரணை செய்து வருகிறார்களாம்.

வேண்டுகோள்

சிலர் கழகத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டு பணம் வசூலிப்பதாகத்தெரியவருகின்றது. இவ்வாறு செய்வதை வன்மையாகக் கண்டிப்பதுடன். மேலும் இவ்வாறு காரியங்களில் இறங்கி கழகத்தின் பெயருக்குமாசு ஏற்படும்படிசெய்ய வேண்டாமென்றும் தி.மு.க. வளர்ச்சிக்காக நன்கொடை அளிக்க விரும்புவோர் செயலாளர் கையொப்பம் இருக்கின்றதா என்பதை கவனித்து அளிக்க வேண்டுமென்றும் குன்றை தி. மு. க. செயலாளர் முருகேசன் எழுதியுள்ளார்.

உண்ணா விரதமிருந்தும் பயனில்லை

சங்கரன்கோவில், மே 20—

நேற்று காலை, சுமார் பத்து மணிக்கு நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் தோழர் ஆ. கு. முத்தாசாரி அவர்கள் சுவாமி சந்நிதி தெருவில் உண்ணாவிரத சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார் காரணம் இங்கேயில் கிராம பஞ்சாயத்து தேர்தல் நடைபெற இருக்கின்றன. அப்பஞ்சாயத்துக்கு தேவையானவர்கள் சுமார் 86 வரை தான் ஆனால் நாமினேஷன் (அப்ளிகேஷன்) போட்டிருப்பவர்கள் சுமார் நூற்றுக்குமேல் போலீஸ் ஆபிஸர் இடம் கொடுக்கப்பட்டு இருக்கின்றனர் அத்தனை பேர்களும் தீவிர காங்கிரஸ் தோழர்கள்தான். ஆனால் யாரையும் வாபஸ் வாங்க சொல்ல முடியவில்லை.

பல வேண்டுகோள் விடுத்தும் பலனில்லை, பொன்விழா மைதானத்தில் 18—5—50ல் இரவு 10 மணிக்குமேல் பொதுக் கூட்டம் கூட்டியும் பலனில்லை, முடிவில் முத்தாசாரி — உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். ஆனால் காங்கிரஸ்காரர்களிடையே ஒற்றுமை இல்லை என்பதை நன்கு தெரிந்துவிட்டோ என்னவோ சில மணி நேரத்தில் அவ்வுண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

குளிக்கும்போதும் அணியக்கூடிய நகைகள்

நியூயார்க், மே 25—

குளிக்கும்போதும் தூங்கும்போதும் அணியக் கூடிய நகைகள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவை உடம்பில் இருப்பதே தெரியாத அளவுக்கு அவ்வளவு லேசானவையாம் இதில் [illegible]; தண்ணீர் புகாதாரம்; மணிப் பேராரம்.

அண்ணாவின் அரிய நூல்கள்

அறப்போர்	1—0—0
ரோமாபுரி ராணிகள்	2—4—0
1858 — 1948	1—0—0
குமரிக்கோட்டம்	1—0—0
கற்பனைச் சித்திரம்	1—0—0
சிறு கதை	1—0—0
ஆரிய மாயை	1—0—0
உலகப் பெரியார்	1—0—0
ஜமீன் இனாம் ஒழிப்பு	1—0—0
பணத் தோட்டம்	1—0—0
தீ பரவட்டும்	1—0—0
வர்ணாஸ்ரமம்	0—12—0
ரேடியோவில் அண்ணா	0—12—0
நிலையும் நினைப்பும்	0—12—0
தாழ்ந்த தமிழகம்	0—8—0
கம்பரசம்	1—8—0
வானொலியில் அண்ணா	1—0—0
மொழிப் போராட்டம் (இரா. நெடுஞ்செழியன்)	1—0—0
மே தினம்	0—5—0

எமது புதிய வெளியீடு விரைவில்

திராவிடப் பண்ணை

தெப்பகுளம் :: திருச்சி.

திருமணம்

ஏகாம்பரம்—ராதாம்மை திருமணம் பூந்தமல்லி சென்னீர் குப்பம் கிராமத்தில் 28—5—50 காலை 8-மணிக்கு தோழர் எ. ஜீவரத்தினம் எம். சி. அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. எஸ். வேலன், து. கணேசன் ஆகியோர் பேசுவர்.

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டைப் பவுடர் மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி, அபார கீர்த்தியைத் தருகிறது.

G. பழனியப்ப முதலியார், மதுரை.

தேவை

நல்ல அனுபவமுள்ள "டிரெடில்மேன்" ஒருவர் தேவை. அனுபவத்திற்கேற்ற ஊதியம் அளிக்கப்படும்.

மானேஜர்: "மாலைமணி"

ஹாங்காங்—கான்டன் ரயில் போக்குவரத்து

ஹாங்காங், மே 25—

ஹாங்காங்கிற்கும் கான்டனுக்குமிடையே நேரிடையான ரயில் போக்குவரத்தை ஆரம்பிக்க அதிக்கு கான்டனில் இரு நாட்கள் நடைபெற்ற மாநாட்டில் விவாதிக்கப்பட்டது, கௌலூன்-கான்டன் ரயில்வேயில், பிரிட்டிஷ் சென் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.